3. அ[illegible] தீர்மானங்கள்.

(அ) விதி 58-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' ஒருநாளில் ஒரு பொருளுக்குமேல் பேரவையில் எடுத்துக் கொள்ளக்கூடாது,, என்ற 58ஆவது விதியைத் தளர்த்தி இன்று, 15—2—1983ஆம் தேதி பேரவையில் ''ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளலாம்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறை வேற்றப்பெற்றது.

4. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்.

திரு. அ. ரகுமான்கான் : *சார் பாயின்ட் ஆப் ஆர்டர்.* நான் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன கேட்கப்போகிறீர்கள் என்பது எனக்குத் தெரிகிறது. இன்றைக்கு ஒத்திவைப்பு தீர்மானத்தில் பேராசிரியர் பேசப் போகிறார். நீங்கள் சொல்லவேண்டியதை பேராசிரியரிடம் சொன்னால், அவர் விளக்கமாகச் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் சொல்வதை ஒரு நிமிடம் கேட்டுவிட்டு உங்களுடைய தீர்ப்பைக் கொடுங்கள். எங்கள் கட்சியின் சார்பில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேராசிரியர் அவர்கள் பேச இருக்கிறார்கள். ஆனால் நான் கூற விரும்புவது வேறு. இன்றைக்கு கடைசி நாள். ஒரு நிமிடம் அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முக்கியமான பிரச்சனையை ஒழுங்காகச் சொல்வதாக இருந்தால் ஒரு நிமிடம் அல்ல, 5 நிமிடங்கள்கூட கொடுக்கிறேன். ஆனால் நீங்கள் இப் போது கூறப்போவதுபற்றி உங்கள் கட்சியின் சார்பில் பேராசிரியர் பேச இருக்கிறார்கள்.

1983 பிப்ரவரி 15]

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் கூறப் போவது வேறு பிரச்சினை. ஒரு நிமிடம் அனுமதி கொடுங் கள். எங்கள் கட்சியின் சார்பில் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசுகிறார்கள். அது பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. 13—2—1983 அன்று சர்வீஸ் கமிஷன் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னலேயே கேள் வித்தாள் (கொஸ்டின் பேப்பர்) வெளியாகிவிட்டது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதப் பட்டிருக்கிறது. அதன் நகல் என்னிடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை பேராசிரியரிடம் கொடுங்கள். அவர் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசும் போது உங்களை விட நன்றாக அதுபற்றி பேசுவார்.

5. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) தேர்வாணைக் கழகத் தேர்வுக்கான கேள்வித் தாள்கள் முன்கூட்டியே வெளியானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் க. அன்பழகன் அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, ரா. கிருஷ்ணன், பெ. சு. திருவேங்கடம், சோ. அழகர்சாமி, தி. கா. நல்லப்பன், இரா. கருப்பையா, மு. அம்பிகாபதி, மு. அப்பாதுரை, எஸ். ஆண்டித்தேவர், செ. சிவசாமி, ஜே. ஹேமச்சந்திரன், பாபு ஜனார்த்தனன், என். பழனிவேல், எம். ஆறுமுகம், பி. சுந்தரம், த. வேணு கோபால், எஸ். இராமலிங்கம், ஏ. சாகுல்ஹமீது ஆகியோர் " தமிழ்நாடு தேர்வாணைக் கழகம் மூலம் குருப் நான்கிற் கான தேர்வு 13—2—1983 அன்று நடைபெறுவதற்கு முன்பே கேள்வித்தாள்கள் மாணவர்களுக்குக் கிடைத்து விட்ட காரணத்தால், கேள்வித்தாள்கள் வெளியாகி விட்டதாலும், மாணவர்களிடையே ஏற்பட்டு இருக்கும் பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையிலே இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் " என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு முன் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

இதேபொருள் குறித்து பேரவையில் 54-ம் விதியின்படி கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர்.

திருவாளர்கள் வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், ஆர். மணிமாறன், ஜே. சி. டி. பிரபாகரன், பி. வெங்கட சுப்பிரமணியம், கோ. விஸ்வநாதன், மி. வின்சென்ட், ஐ. கணேசன், ஏ. சி. சண்முகம், டாக்டர் கே. சமரசம்.